**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2022 ம் வருடம் ஏப்ரல் திங்கள் 08 ம் நாள் வெள்ளிக்கிழமை

**அ.வ.எண்.55/2016 இல் இ.ம.எண்.364/2017 இல் இ.ம.எண்.02/2019**

1. பொள்ளாச்சி தாலூக்கா, திப்பம்பட்டி, பூங்கா நகர், என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.சுப்பிரமணியம் மகன் சுமார் 40 வயதுள்ள திரு.கோவிந்தராஜ்.

2. பொள்ளாச்சி தாலூக்கா, திப்பம்பட்டி, கண்ணப்பன் நகர், கதவு எண்.1, 88 என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.ரங்கசாமி செட்டியார் மகன் சுமார் 65 வயதுள்ள திரு.முத்துசாமி.

... மனுதாரர்கள் / வாதிகள்

/ எதிர் /

1. பொள்ளாச்சி தாலூக்கா, ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோவில் வீதி, என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.செல்லமுத்து மகன் சுமார் 38 வயதுள்ள திரு.பிரபு.

2. பொள்ளாச்சி தாலூக்கா, ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோவில் வீதி, என்கிற விலாசத்தில் வசித்து வரும் திரு.செல்லமுத்து மகன் சுமார் 32 வயதுள்ள திரு.வெங்கடேஷ்.

.... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது மனுதாரர் / வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சொத்து விபரத்தில் விடுபட்டு போன நத்தம் க.ச.நெ.89/B2 எண்ணை சேர்த்து மனுவினை திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VI விதி 17 மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 12.07.2019

இம்மனுவானது கடந்த 21.03.2022 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்

திரு.M.A.கனகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.நந்தகோபாலகார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள் / வாதிகள், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**இறுதி உத்தரவு**

| | |
|---|---|
| 1. | முடிவாக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்கள் / வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.364/2017 மனுவின் சொத்து விபரத்தில் விடுபட்டு போன நத்தம் க.ச.நெ.89/B2 எண்ணை சேர்த்து மனுவினை திருத்தம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத்தொகை இல்லை. |

**சொத்து விபரம்**

– இல்லை –

இவ்வுத்தரவு 2022ம் வருடம் ஏப்ரல் மாதம் 08ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ஒப்பம்/-(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**இறுதி உத்தரவு**
அ.வ.எண்.55/2016
இல்
இ.ம.எண்.364/2017
இல்
இ.ம.எண்.02/2019
நாள் : 08.04.2022
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---